# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 82/ந/2025
நாள். 04.07.2025

திரு. S. சேதுபதி – முறையீட்டு மனுதாரர்
பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, நல்லப்பா தியேட்டர் பின்புறம், L.I.G. காலனி, 1 லேஅவுட், கதவு எண்.104/42 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சேதுபதி என்பவரின் 07.12.2024 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.12.2024 அன்று பெறப்பட்டு, 82/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, நல்லப்பா தியேட்டர் பின்புறம், L.I.G. காலனி, 1 லேஅவுட், கதவு எண்.104/42 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சேதுபதி என்பவர் தனது 07.12.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

> “நான் பொள்ளாச்சி நகராட்சியில் காவலராக பணி புரிந்து 30.06.2022–ல் ஓய்வு பெற்றேன். எனது ஓய்வூதிய கருத்துருக்கள் பொள்ளாச்சி நகராட்சியில் இருந்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்களுக்கு வேண்டுமென்றே உள் நோக்கத்துடன் கடுங்குறைபாடுகளுடன் அனுபப்பட்டது. எனது இறுதி ஊதியம் ரூ.32000/– ஆகும். ஓய்வூதிய கருத்துருவில் ரூ.32000/– என குறிப்பிட்டு விட்டு வேண்டுமென்றே அதனை பணி பதிவேட்டில் பதியவில்லை. அதனால் எனக்கு குறைந்த ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. எனது பழைய பணி காலம் கணக்கில் எடுக்கப்படவில்லை. தேர்வு நிலை வழங்கப்படவில்லை, மேலும் எனக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்டதாக கூறி ரூ.1,08,125/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இது உச்ச நீதிமன்ற தீர்ப்பாணை மற்றும் அரசாணை எண். 286 நாள்.28.08.2018–க்கு எதிராகும். எனவே பொள்ளாச்சி நகராட்சியில் வேண்டுமென செய்த கடுங்குறைபாடுகளை நீக்கி எனக்கு நல்லதொரு நீதி கிடைக்க உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 14.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண். 1353/2025/இ1, நாள் 24.04.2025–ன் வழி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

“திரு. S. சேதுபதி என்பவருக்கு ஒரு நபர் ஊதியக்குழுவின் அடிப்படையில் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு (Trade Post) ஊதியம் மறு நிர்ணயம் செய்ய இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களின் கடித எண்.8690/எல்எப்4/2013, நாள்.19.06.2014–ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.45529/எப்3/2010, நாள்.21.05.2015–ன்படியும், இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண். 2448/2015/இ1, நாள் 23.10.2015–ன்படியும் ஊதியம் திருத்தி மறு நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.108125/– ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிடித்தங்கள் சம்மந்தமாக வழக்கு ஏதும் தொடரப்படவில்லை. தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஓய்வூதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினக்கூலி பணியினை ஓய்வூதிய பணிப்பயன்களுக்கு எடுத்துக்கொள்ள ஏதுவாக உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஊதிய உயர்வு பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டது. தற்போது திருத்திய ஓய்வூதிய பிரேரணைகள் உள்ளாட்சி தணிக்கை இயக்குநருக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும், எதிர்மனுதாரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரையும் 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருத்தினர் மாளிகையில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 22.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. S. சேதுபதி என்பவர் 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருத்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

“பொள்ளாச்சி நகராட்சியில் காவலராக பணிபுரிந்து 30.06.2022–ல் ஓய்வு பெற்ற நிலையில் எனது ஓய்வூதிய கருத்துருக்கள் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்களுக்கு வேண்டுமென்றே உள் நோக்கத்துடன் கடுங்குறைபாடுகளுடன் அனுப்பப்பட்டது.

எனது இறுதி ஊதியம் ரூ.32,000/–ஐ ஓய்வூதிய கருத்துருவில் குறிப்பிட்டுள்ள நிலையில் வேண்டுமென்றே அதனை பணி பதிவேட்டில் பதியவில்லை. இதனால் பணிக்காலம் கணக்கில் எடுக்கப்படவில்லை. தேர்வுநிலையும் வழங்கப்படவில்லை.

அதிக ஊதியம் வழங்கப்பட்டதாக கூறி ரூ.1,08,125/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது, உச்சநீதி மன்ற தீர்ப்பானை மற்றும் அரசாணை எண்.286 நாள் 28.08.2018–க்கு எதிரான செயலாகும்.

பொள்ளாச்சி நகராட்சியினரால் தெரிவிக்கப்பட்டுள்ள என் மீதான கடுங்குறைபாடுகளை நீக்கி நல்லதொரு நீதி கிடைக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண். 1353/2025/சி1, நாள் 30.04.2025–ல், நிர்வாக காரணங்களால் தனக்கு பதிலாக நகராட்சி மேலாளர் விசாரணையில் கலந்து கொண்டு விளக்கமளிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருத்தினர் மாளிகையில் நடைபெற்ற நேரடி விசாரணையில் பொள்ளாச்சி நகராட்சி மேலாளர் திரு. வே. பூபேந்திரன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரருக்கு ஒரு நபர் ஊதியக்குழுவின் அடிப்படையில் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு (Trade Post) ஊதியம் மறு நிர்ணயம் செய்ய இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களின் கடித எண்.8690/எல்எப்4/2013, நாள் 19.06.2014–ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர்

சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.45529/எப்3/2010, நாள் 21.05.2015–ன்படியும், பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 2448 / 2015 / இ1, நாள் 23.10.2015–ன்படியும் ஊதியம் திருத்தி மறு நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.108125/– ஒய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு ஏதும் இல்லை.

தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஓய்வூதியம் மறுநிர்ணயம் செய்யபட்ட விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினக்கூலி பணியினை ஓய்வூதிய பணி பயன்களுக்கு எடுத்துக்கொள்ள ஏதுவாக உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஊதிய உயர்வு பதிவுகள் பணிபதிவேட்டில் பதியப்பட்டது.

ஓய்வூதிய முன்மொழிவில் ரூ.32000/– இறுதி ஊதியமாக உறுதி செய்யப்பட்டு, தற்போது திருத்திய ஓய்வூதிய பிரேரணைகள் உள்ளாட்சி தணிக்கை இயக்குநருக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆணையர் சார்பாக ஆஜரான பொள்ளாச்சி நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது மனு மற்றும் வாக்குமூலத்தில், தான் பொள்ளாச்சி நகராட்சியில் காவலராக பணி புரிந்து 30.06.2022–ல் ஒய்வு பெற்றதாகவும், மனுதாரரது ஒய்வூதிய கருத்துருக்களை உள்நோக்கத்துடன் கடுங்குறைபாடுகளுடன் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும், அக்கருத்துருவில் குறைந்த ஒய்வூதியம் நிர்ணயம் செய்யப்பட்டதாகவும், பழைய தினக்கூலி பணிக்காலம் கணக்கில் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிக ஊதியம் வழங்கப்பட்டதாக கூறி ரூ.1,08,125/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, பொள்ளாச்சி நகராட்சியில் வேண்டுமென செய்த கடுங்குறைபாடுகளை நீக்கிட உத்தரவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மனுதாரருக்கு ஒரு நபர் ஊதியக்குழுவின் அடிப்படையில் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு ஊதியம் மறு நிர்ணயம் செய்ய இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களின் கடித எண்.8690/எல்எப்4/2013, நாள் 19.06.2014ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.45529/எப்3/2010, நாள்.21.05.2015–ன்படியும், பொள்ளாச்சி நகராட்சி அலுவலக செயல்முறைகள் ந.க.எண். 2448/2015/இ1, நாள் 23.10.2015ன்படியும் ஊதியம் திருத்திய மறு நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.108125/– ஒய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஓய்வூதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினக்கூலி பணியினை ஓய்வூதிய பணி பயன்களுக்கு எடுத்துக்கொள்ள ஏதுவாக உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஊதிய உயர்வு பதிவுகள் பணிபதிவேட்டில் பதியப்பட்டதாகவும், தற்போது திருத்திய ஒய்வூதிய பிரேரணைகள் உள்ளாட்சி தணிக்கை இயக்குநருக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பொள்ளாச்சி நகராட்சி அலுவலக மேலாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் அறியவருகிறது.

இந்நேர்வில், பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பொள்ளாச்சி ஆணையர் சார்பில் ஆஜரான நகராட்சி அலுவலக மேலாளரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மனுதாரரின் தினக்கூலி பணி பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதா என்பதையும், அரசாணை G.O. Ms.No.286 Finance (Pension) Department Dated 28th August 2018–ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்பதையும், ஆய்வு செய்து உரிய

நடவடிக்கை மேற்கொள்ள திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 04–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. சேதுபதி ,
கதவு எண்.104/42 L.I.G. காலனி 1 லேஅவுட்,
நல்லப்பா தியேட்டர் பின்புறம்,
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்– 642 001.

2) நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
திருப்பூர் மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

8/7/25
செயலாளர்

8/8
3/5/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032